

# வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை; தயார் நிலையில் நிர்வாகம்: அதிகாரிகளுக்கு முதலமைச்சர் விஜய் உத்தரவு

சென்னை, செப்.9– வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை தயார் நிலையில் வைக்க வேண்டும் எனவும், நடவடிக்கை பணிகளை விரைவுபடுத்துமாறும் அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, முதலமைச்சர் விஜய் தலைமையில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. மேலும், சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்ட கலெக்டர்கள் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்றனர். அப்போது, சென்னை, காஞ்சீபுரம், கடலூர், திருவள்ளூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் விஜய் கூறியதாவது:–

கடந்த பருவமழைக் காலங்களில் வெள்ளம் பாதித்த இடங்கள் மற்றும் ஏனைய பகுதிகளில் நடைபெறும் பணிகளை அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்களைக் கொண்ட குழுவினர் வாரம் இருமுறையாவது ஆய்வுசெய்து பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும், ஆய்வின்போது கண்டறியப்பட்ட குறைபாடுகளைக் களைந்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும், அனைத்துத் துறை அலுவலர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, மாநகராட்சி நிர்வாகம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மின்வளத்துறை மற்றும் மின்சார வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஆகியவை ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக நிறைவுபெறாமல் இருக்கும் குடிநீர், கழிவுநீர்க் கால்வாய்கள், மற்றும் சாலைப் பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், அறுந்து விழக்கூடிய நிலையில் உள்ள மின் கம்பிகள், பலவீனமான மின் கம்பங்கள் ஆகியவற்றை உடனடியாக மின்துறையினர் சீரமைக்க வேண்டும். மழைக்காலங்களில் மின் கம்பிகளால் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் விரைவாக வெளியேறும் வகையில் நீர்நிலைகளில் ஆகாயத்தாமரை அகற்றப்படுவதோடு, கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களைத் தூர்வாருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் சாலைகளில் வெள்ளநீர் அதிகம் தேங்கிய பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, வெள்ளநீர் தேங்காதவாறு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

வெள்ள நீரை உடனடியாக வெளியேற்ற மின்மோட்டார்கள் மற்றும் சாலைகளில் விழுந்த மரங்களை அப்புறப்படுத்த மின் ரம்பங்கள், ஜெ.சி.பி. போன்றவற்றையும், மழைநீர் தேங்கும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் வகையில் படகுகளையும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மேலும், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களைப் பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கு ஏதுவாக சமூக நலக்கூடங்கள், பள்ளிகள் ஆகியவற்றைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் வகையில் சமுதாய உணவுக் கூடங்கள் தயார்நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும்.

இவ்வாறு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், அமைச்சர்கள் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், டி.கே.பிரபு, ம. விஜய் பாலாஜி, க.விக்னேஷ், சீ.ரமேஷ், த.சரத்குமார், ரா. குமார், த. லோகேஷ் தமிழ்செல்வன், தலைமைச் செயலாளர் சாய்குமார், டி.ஜி.பி. மகேஷ் குமார் அகர்வால் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# மனித உரிமை ஆணையத்தை நாடாமல் நேரடியாக மனித உரிமை நீதிமன்றங்களை அணுகலாம்: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடெல்லி, செப். 9 மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், தேசிய அல்லது மாநில மனித உரிமைகள் ஆணையங்களை முதலில் அணுகாமல், நேரடியாகவே மாவட்ட அளவிலான மனித உரிமை நீதிமன்றங்களை (Human Rights Courts) அணுகி பரிகாரம் கோர முடியும் என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. அத்துடன், இதற்கு வழிவகுக்கும் கர்நாடக அரசின் விதிகளையும் உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 இன் கீழ், மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் முதன்மை அமர்வு நீதிமன்றத்தை சிறப்பு மனித உரிமைகள் நீதிமன்றமாக நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரை அல்லது குற்றப்பத்திரிகை இன்றி ஒரு தனிநபர் நேரடியாக இந்த நீதிமன்றங்களை அணுக முடியுமா என்ற சட்டப்பூர்வ சர்ச்சை நீண்டகாலமாக நீடித்து வந்தது.

இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு, கர்நாடக உயர்நீதிமன்றம் முன்னதாக அளித்த தீர்ப்பை உறுதி செய்து உத்தரவிட்டது. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 30இன் கீழ் நிறுவப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றங்கள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட குடிமக்கள் நேரடியாகப் புகார் அளித்து நீதியைப் பெறுவதைத் தடுக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமை ஆணையங்களுக்கு மட்டுமே செல்ல வேண்டும் என்று எந்தவித கட்டாய விதியும் இல்லை," என்று தெளிவுபடுத்தினர்.

மேலும், "மனித உரிமைகள் ஆணையங்கள் பிரதானமாகப் பரிந்துரை அதிகாரங்களை மட்டுமே கொண்ட அமைப்புகளாகும்; ஆனால் சிறப்பு நீதிமன்றங்கள் குற்றவியல் விசாரணை மற்றும் உரிய இழப்பீடுகளை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. எனவே, கர்நாடக அரசு வகுத்துள்ள விதிகள் சட்டத்திற்கு உட்பட்டவையே. இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையின்றி காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டு, விரைவான நீதி கிடைப்பது உறுதி செய்யப்படும்," என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

# ஆயிரம் ஆண்டுகளாக விண்வெளியில் உருவான 'சிங்க நெபுலா' புகைப்படம்: நாசா வெளியீடு



வாஷிங்டன், செப். 9 விண்வெளியில் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக அடர்ந்த வாயுக்கள், விண்மீன் துகள்கள் மற்றும் அண்டப் பெருவெளியின் தூசிகளால் உருவான 'சிங்க நெபுலா'வின் அதிநவீன புகைப்படத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா வெளியிட்டுள்ளது.

செபியஸ் விண்மீன் மண்டலத்தில், பூமியிலிருந்து சுமார் 10,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள இந்த விண்மீன் படலம், பார்ப்பதற்கு கர்ஜிக்கும் சிங்கத்தின் முகத்தைப் போன்ற வடிவத்தைக் கொண்டுள்ளது.

நாசாவின் அதிநவீன விண்வெளி தொலைநோக்கிகள் மூலம் பதிவு செய்யப்பட்ட அகச்சிவப்பு மற்றும் ஒளியியல் தரவுகளை ஒருங்கிணைத்து இந்த வண்ணமயமான புதிய புகைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, சூடான இளம் நட்சத்திரங்களிலிருந்து வெளியேறும் தீவிர புற ஊதா கதிர்வீச்சு மற்றும் சக்திவாய்ந்த விண்மீன் காற்று காரணமாக, சுற்றியுள்ள ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் வாயுக்கள் ஒளிர்கின்றன. இந்த செயல்பாடுகளே சிங்கத்தின் பிடரி மற்றும் முக அமைப்பைப் போன்ற தோற்றத்தை விண்வெளியில் உருவாக்கியுள்ளன.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து நிகழும் இந்த வாயுக்களின் நகர்வும், புதிய நட்சத்திரங்களின் பிறப்புமே இந்த நெபுலாவை வானியலாளர்களின் முக்கிய ஆய்வு மையமாக மாற்றியுள்ளது.

நாசா வெளியிட்டுள்ள இந்தப் புகைப்படம், விண்மீன்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதையும், அடர்ந்த அண்டத் தூசிகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் பிரபஞ்ச ரகசியங்களையும் புரிந்துகொள்ள பெரிதும் உதவும் என்று சர்வதேச விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## யூகால் லிமிடெட்

CIN:L31900TN1985PLC012343

பதிவு அலுவலகம்: 11B/2 (எஸ்.பி), 1வது குறுக்கு சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600 058. தொலைபேசி எண்.044-6654 4719, மின்னஞ்சல்: ufsl.ho@ucal.com; இணையதளம்: www.ucal.com

கம்பெனிகள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 201–ன் படி இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், திரு. ஜெயகர் கிருஷ்ணமூர்த்தி (DIN:00018987) அவர்களை கம்பெனியின் நிர்வாக இயக்குனராக 1 செப்டம்பர் 2026 முதல் 31 ஆகஸ்ட் 2031 வரை 5 ஆண்டு காலத்திற்கு மறுநியமனம் செய்வது தொடர்பாக, 8 ஜூலை 2026 அன்று நடைபெற்ற இயக்குனர் குழு மற்றும் நியமனம் மற்றும் ஊதியக் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், மற்றும் 13 ஆகஸ்ட் 2026 அன்று தபால் வாக்கு (postal ballot) மூலம் உறுப்பினர்கள் அளித்த ஒப்புதலின்படி, சட்டத்தின் அட்டவணை V–ன் பகுதி–1 உடன் பிரிவு 196 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், மத்திய அரசுக்கு, அதாவது இந்திய அரசின் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்திற்கு யூகால் லிமிடெட் ("கம்பெனி") விண்ணப்பம் செய்ய உத்தேசித்துள்ளது.

மேற்கூறியவற்றில் ஏதேனும் ஆட்சேபனை(கள்) உள்ள நபர்கள், தாங்கள் விரும்பினால், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் செயலாளர், கார்ப்பரேட் விவகார அமைச்சகம், இந்திய அரசு, ஏ–விங், சாஸ்திரி பவன், டாக்டர். ராஜேந்திர பிரசாத் சாலை, புதுடெல்லி 110 001 என்ற முகவரிக்குத் தமது ஆட்சேபனைகளை எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கலாம் மற்றும் அதன் நகலை மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கம்பெனிக்கு அனுப்பலாம்.

இயக்குனர் குழுவின் உத்தரவின்படி
யூகால் லிமிடெட்டிற்காக
ராம் ராமமூர்த்தி
முழு நேர இயக்குனர்
DIN:06955444

இடம் : சென்னை
தேதி : 08.09.2026

## கலிபோர்னியா சாப்ட்வேர் கம்பெனி லிமிடெட்

CIN- L72300TN1992PLC022135

பதிவு அலுவலகம்: பிரின்ஸ் இன்ஃபோசிட்டி-I, 12வது தளம், ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி, OMR பேஸ்-1, சென்னை - 600 096.

E-Mail: investor@calsoftgroup.com

### 34வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் தகவல் மற்றும் புத்தகம் மூடல்

34வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக M/s.கலிபோர்னியா சாப்ட்வேர் கம்பெனி லிமிடெட்-ன் (CIN: L72300TN1992PLC022135) 34வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) **செவ்வாய்கிழமை, செப்டம்பர் 29, 2026 அன்று மாலை 5.00 மணிக்கு** (இந்திய நேரப்படி) காணொலி காட்சி (VC), அல்லது பிற ஆடியோ காட்சி முறை (OVAM) மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

MCA மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க, **வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 04, 2026** அன்று நிறுவனம் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்களின் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் **34வது** வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் 2025-26 ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையின் மின்னணு நகல்கள் **திங்கட்கிழமை, 07 செப்டம்பர், 2026** அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவிப்பு மற்றும் 2025-26-ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இணையதளமான www.calsofts.com மற்றும் பங்கு சந்தைகள் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் NSDL இணையதளம் www.evotingindia.com. லும் கிடைக்கப்பெறும்.

இப்போது, எங்கள் செயல்திறன், இலக்குகள் மற்றும் மூல உபாய விரிவான பார்வையை வழங்க சில கூடுதல் பக்கங்களைச் சேர்த்துள்ளோம் என்பதை தயவுசெய்து கவனிக்கவும். இந்த ஆண்டு AGM அறிக்கையில் உள்ள எங்கள் செயல்பாடுகள், நிதி அளவீடுகள் மற்றும் பிற தொடர்புடைய விவரங்களை ஆழமாக அறிய கூடுதல் பக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட அறிக்கையை **https://www.calsofts.com/_files/ugd/535075_6688b3986a7841fcbba986df7f4f2572.pdf** -இல் பதிவிறக்கம் செய்யலாம்.

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 108 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014 -ன் விதி 20, SEBI (LODR) கட்டுபாடுகள், 2015-ன் கட்டுப்பாடு 44 ஆகியவற்றிற்கு இணங்க, NSDL வழங்கும் மின்னணு முறையை (மின்னணு வாக்குபதிவு) பயன்படுத்தி 34வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை அளிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. **வெள்ளிக்கிழமை, 04 செப்டம்பர், 2026** (கட் ஆப் தேதி) அன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதன பங்குகளை வைத்துள்ள விகிதத்திற்கு ஏற்ப உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும்.

i. தொலைநிலை மின்னணு வாக்களிப்பு **சனிக்கிழமை, செப்டம்பர் 26, 2026 (காலை 09:00 மணி) அன்று துவங்கும்.**
ii. தொலைநிலை மின்னணு வாக்களிப்பு **திங்கட்கிழமை, செப்டம்பர் 28, 2026 (மாலை 5:00 மணி) அன்று முடிவடைகிறது.**
iii. **திங்கட்கிழமை, செப்டம்பர் 28, 2026** அன்று மாலை 05.00 மணிக்கு பிறகு தொலைநிலை மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.
iv. மின்னணு முறையில் அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் தகுதியை தீர்மானிக்கும் கட்-ஆப் தேதி **செவ்வாய்கிழமை, 22 செப்டம்பர் 2026 .**
v. நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பரிமாற்ற புத்தகங்கள் நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்ட நோக்கத்திற்காக **செவ்வாய்கிழமை, 22 செப்டம்பர் 2026** முதல் **செவ்வாய்கிழமை, 29 செப்டம்பர் 2026** வரை (இரண்டு நாட்களும் உள்ளடக்கியது) மூடப்படும்.
vi. VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் தொலைநிலை மின்னணு வாக்களிப்பு மூலம் தீர்மானங்கள் மீது வாக்களிக்காதவர்கள் மற்றும் இல்லையெனில் அவ்வாறு செய்ய தடை செய்யப்படாதவர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலை நிலை மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்க அவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். வருடாந்திர பொது கூட்டத்திற்கு முன்னரே தொலை நிலை மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் / VC / OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் அவர்கள் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
vii. நிறுவனத்தால் மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்பிய பிறகு நிறுவனத்தின் பங்குகளை வாங்கி நிறுவனத்தின் உறுப்பினராகும் எந்தவொரு நபரும் மற்றும் கட் ஆப் தேதியான செவ்வாய்கிழமை, 22 செப்டம்பர், 2026 அன்று பங்குகளை வைத்துள்ளவர்களும் info@nsdl.co.in அல்லது எங்களது பதிவாளரும் பங்குமாற்று முகவருமான (RTA) M/s.இன்டகிரேடட் ரெஜிஸ்டரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் மின்னஞ்சல் முகவரி yuvraj@integratedindia.in-க்கு போலியோ எண் விவரத்தை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக்கொள்ளலாம்.
viii. ஏதேனும் கேள்விகள் இருந்தால், அது குறித்து உறுப்பினர்கள் https://www.evotingindia.com -ல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) பிரிவு மற்றும் பதிவிறக்க பிரிவில் உள்ள உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது info@nsdl.co.in-க்கு கோரிக்கை அனுப்பவும்.

**கலிபோர்னியா சாப்ட்வேர் கம்பெனி லிமிடெட்-க்காக**
**ஒப்பம்/-**
**டாக்டர். வாசுதேவன் மகாலிங்கம்**
**நிர்வாக இயக்குநர்**
**DIN No: 01608150**

**தேதி : 07.09.2026**
**இடம் : சென்னை**

**IN THE COURT OF THE PRINCIPAL COMMERCIAL JUDGE, AT EGMORE, CHENNAI -8**
**C.O.S.No. 341 of 2026**

**CANARA BANK,** Teynampet Branch,
No.524, Anna Salai, Teynampet, Chennai - 600 018
Represented by its Chief Manager
IFSC Code: CNRB0000416 **...Plaintiff**

**-Vs-**

**1.Mrs. Sumathi Pushparaj,** [PAN No.BAMPS8095J]
W/o. K.T.Pushaparaj, No.10, Sakthi nagar, Vellanur, Avadi, Chennai-600 062

**2.Mr.P.Vigneshwar,** [PAN No.BUXPV3847G]
S/o. K.T.Pushparaj, No.10, Sakthi nagar, Vellanur, Avadi, Chennai 600 062 **...Defendants**

The above suit was instituted against the defendants herein to recover a sum of **Rs.8,70,031.64/- (Rupees Eight Lakhs Seventy Thousand Thirty One and Paise Sixty Four only)** together with interest at **8.30%** Per annum in respect of Housing Loan vide **Loan Account No.0416619000203** and **Rs.1,39,891.79/-(Rupees One Lakh Thirty Nine Thousand Eight Hundred Ninety One and Paise Seventy Nine only)** together with interest at **10.65%** Per annum in respect of NPA Credit Card vide **Loan Account No. 125002970493.** Whereas despite the issuance of the summons for your appearance and you failed to appear in court on **02.09.2026.** Whereas, the Hon'ble Court was pleased to order the substituted service by the way of paper publication for your appearance on **21.09.2026.** Therefore, kindly take notice and appear on **21.09.2026** in the said court at **10.30 am.** Failing which the matter will be heard and decide in your absence.

Yours Truly
**S.Kesavan, M.Gopi, K.Vidhya Sri Theresa**
Counsel for Plaintiff
Mob: 9381034657

**ENROLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter I, D.SAMPATH KUMAR, S/o. S. DHANAVEL, aged 65 years, permanently residing at No.104/198, Krishna Square, Thanthai Periyar Nagar, Villupuram, Tamilnadu – 605602, intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry Bar Council buildings, High court campus, Chennai – 600104
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**D.SAMPATH KUMAR**

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months thereafter I, S. JAWAHAR, S/O. Subramanian, aged 43 years, Address, B1–116, Romaa Paradise, Irulapalayam Road, Kuthambakkam, Thiruvallur, Tamilnadu–600124. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council building High Court campus Chennai – 600104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**S. JAWAHAR**

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter I, SREEKAILAS B.J, S/O. BALAN, Aged 52 years, Address: Flat No.2054, Osian ChlorophyLL, Devi Parasakthi Nagar, Karambakkam, Chennai–600116. Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry,Bar Council Bulidings,High Court Campus, Chennai -104
Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

**SREEKAILAS B.J**

**பெயர் மாற்றம்**

எனது மகள் யாத்ரா அய்யப்பன் (YAATHRA AYYAPPAN) Old Surname : அய்யப்பன் (AYYAPPAN) (Passport No.X9937705) பிறந்ததேதி 06.03.2023 (சொந்த மாவட்டம்: கள்ளக்குறிச்சி)எண்.88/19/14, எம்.ஆர்.என்.நகர், துருகம் ரோடு, கள்ளக்குறிச்சி – அஞ்சல், வட்டம்& மாவட்டம் –606202 தமிழ்நாடு என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி யாத்ரா (YAATHRA) NEW SURNAME: அய்யப்பன் விண்ணரசி (AYYAPPAN VINNARASI) என்று அழைக்கப்படுகிறார்.
Old Name:யாத்ரா அய்யப்பன் (YAATHRA AYYAPPAN)
New Name:யாத்ரா(YAATHRA)
Old Surname:
அய்யப்பன் (AYYAPPAN)
New Surname:
அய்யப்பன் விண்ணரசி (AYYAPPAN VINNARASI)

விண்ணரசி (தாயார்)

## ஃப்ரெஷாரா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட்

(முன்னர் ஃப்ரெஷாரா பிக்ல்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் என்று அழைக்கப்பட்டது)

**பதிவு அலுவலகம்:** பழைய எண்.3, புதிய எண்.9, புரம் பிரகாசம் சாலை, பாலாஜி நகர், ராயப்பேட்டை, சென்னை – 600014, தமிழ்நாடு, இந்தியா.
| **இணையதளம் :** https://www.fresharaagroexports.com | **மின்னஞ்சல் :** info@fresharaagroexports.com | **தொடர்பு எண் :** +91 44 43570138
**CIN :** L10306TN2023PLC165437

### பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

நிறுவனத்தின் 3வது வருடாந்திர பொதுக்கூட்டத்தைக் கூட்டும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வணிகங்களை பரிவர்த்தனை செய்ய, நிறுவனத்தின் 3வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) புதன்கிழமை, செப்டம்பர் 30, 2026 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு காணொளி காட்சி ("VC")/பிற ஆடியோ–காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்) மற்றும் அதன் கீழ் பொருந்தக்கூடிய விதிகள், SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவை) விதிமுறைகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் / செக்யூரிட்டீஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவினால் வெளியிடப்பட்ட பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின்படி, உறுப்பினர்கள் ஒரு பொதுவான இடத்தில் நேரடியாக பங்கேற்காமல் VC/OAVM மூலம் AGM–ஐ நடத்த அனுமதிக்கிறது. நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) வழங்கும் மின்னணு தளம் மூலம் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வசதி வழங்கப்படும்.

நிறுவனம் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைவருக்கும் மின்னணு முறையில், 3வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பை, 2025–26 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையின் இணைப்புடன் சேர்த்து, செப்டம்பர் 08, 2026 அன்று நிறுவனம் அனுப்பியுள்ளது. 3வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இணையதளம் https://www.fresharaagroexports.com/இல், பங்குச் சந்தையின் இணையதளமான என்எஸ்இ இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com–லும், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (NSDL) இணையதளம் www.evoting.nsdl.com–லும் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம்.

உறுப்பினர்கள் மேலும் கவனத்தில் கொள்ள வேண்டியது:

i. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வணிகம்(கள்), தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் பரிவர்த்தனை செய்யப்படும்.
ii. உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமைகள், கட்–ஆஃப் தேதியான, அதாவது, புதன்கிழமை, செப்டம்பர் 23, 2026 அன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் அவர்களின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும். கட்–ஆஃப் தேதியின்படி உறுப்பினர்கள்/பயன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ AGM–ல் மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பெற உரிமையுடையவர். மேலும், கட்–ஆஃப் தேதியின்படி உறுப்பினராக இல்லாத நபர் AGM அறிவிப்பை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கருத வேண்டும்.
iii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செப்டம்பர் 27, 2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்குத் தொடங்கி செப்டம்பர் 29, 2026 செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு முடிவடையும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது.
iv. 3வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, பங்குகளை வாங்கி நிறுவனத்தின் உறுப்பினராகும் எந்தவொரு நபரும், கட்–ஆஃப் தேதியின்படி பங்குகளை வைத்திருப்பவர்கள், அதாவது புதன்கிழமை, செப்டம்பர் 23, 2026 அன்று, evoting@nsdl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு டிமேட் கணக்கு எண், நிலையான கணக்கு எண், பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட முகவரியைக் குறிப்பிட்டு கோரிக்கையை அனுப்பி உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், NSDL–ல் மின்னணு வாக்குப்பதிவுக்காக ஏற்கனவே பதிவுசெய்த உறுப்பினர்கள், தொலைதூர வாக்குப்பதிவு/ AGM–ல் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க தங்கள் தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.
v. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது மின்னணு வாக்குப்பதிவுக்கான உள்நுழைவுச் சான்றுகள், நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளைக் கொண்ட உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் அனுப்பப்பட்டுள்ளன. நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் விதம் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது, இது நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்கிறது.
vi. வருடாந்திர பொதுக் கூட்டத்திலேயே மின்னணு வாக்களிப்பு வசதி செய்யப்படும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஆனால் ஏற்கனவே வாக்களிக்காத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகம்(கள்) மீது மின்னணு முறையில் வாக்களிக்கலாம். மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், அவர்கள் மறுபடியும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க உரிமை பெறமாட்டார்கள்.
vii. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/மின்னணு வாக்குப்பதிவு செயல்முறை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிமுறைகள் ஆகியவை இடம்பெற்றுள்ளது.
viii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்வதற்காக சென்னையைச் சேர்ந்த பயிற்சி நிறுவனச் செயலாளர்களான M/s ஏ. கோல்சா & கோ. நியமிக்கப்பட்டு உள்ளது.
ix. கூட்டம் முடிந்த இரண்டு வேலை நாட்களுக்குள், நிறுவனத்தின் இணையதளம் https://www.fresharaagroexports.com/, NSDL இணையதளம் www.evoting.nsdl.com மற்றும் என்எஸ்இ இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com ஆகியவற்றில் முடிவுகள் அறிவிக்கப்படும்.
x. டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரி புதுப்பிக்கப்படாத உறுப்பினர்கள், டிமேட் கணக்கு பராமரிக்கப்படும் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
xi. மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் கேள்விகள்/குறைகள் இருந்தால், NSDL, திருமதி. பிரஜக்தா பாவ்லே, நிர்வாகி, NSDL, 4வது தளம், 'A' விங், டிரேட் வேர்ல்ட், கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல்: evoting@nsdl.com, தொலைபேசி: 022 – 4886 7000 மற்றும் 022 – 2499 7000

**இயக்குனர்கள் குழு உத்தரவுப்படி**
**ஃப்ரெஷாரா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/–**
**பிரியதர்ஷினி** B
நிறுவனச் செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி

தேதி : 08.09.2026
இடம் : சென்னை

**படிவம் எண். CAA. 2**

[நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 230(3) மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள், 2016–ன் விதி 6 மற்றும் 7–ன் படி]

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் முன்பாக,**
**பிரிவு அமர்வு II, சென்னை**
**நிறுவன விண்ணப்ப எண். CA(CAA) / 28 (CHE) / 2026**
**நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 232 உடன் பிரிவு 230–ன் விஷயத்தில்**
**மற்றும்**
**கே.பி. மணீஷ் குளோபல் இன்கிரிடியன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரிந்த நிறுவனம்)**
**மற்றும்**
**காவ்மன் பார்மா பிரைவேட் லிமிடெட் (உருவான நிறுவனம்)**
**மற்றும்**
**அதன் உறுப்பினர்கள் மற்றும் கடன் வழங்கியவர்கள் இடையே**
**சீரமைப்பு திட்டம் (பிரித்தல்) தொடர்பான விஷயத்தில்**

| | |
|---|---|
| **கே.பி. மணீஷ் குளோபல் இன்கிரிடியன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், நிறுவனங்கள் சட்டம், 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்டது, நிறுவன அடையாள எண்: U24297TN2007PTC065205**<br>**பதிவு அலுவலகம்: எண். 41, ரகுநாயக்குலு தெரு, பூங்கா நகர், சென்னை 600001** | **...முதல் விண்ணப்பதாரர் நிறுவனம் / பிரிந்த நிறுவனம்** |

**நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவரின் (UNSECURED CREDITORS) கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் அறிவிப்பின் விளம்பரம்**

13 ஜூலை 2026 மற்றும் 25 ஆகஸ்ட் 2026 தேதியிட்ட உத்தரவுகளின்படி ("தீர்ப்பாய உத்தரவு"), தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் ("தீர்ப்பாயம்") சென்னை அமர்வு II, நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளுடன் சேர்த்து பிரிவு 230 முதல் 232 வரையிலான விதிகளின் கீழ், கே.பி. மணீஷ் குளோபல் இன்கிரிடியன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரிந்த நிறுவனம்) மற்றும் காவ்மன் பார்மா பிரைவேட் லிமிடெட் (உருவான நிறுவனம்) மற்றும் அவற்றின் தொடர்புடைய உறுப்பினர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுக்கு இடையிலான முன்மொழியப்பட்ட சீரமைப்பு திட்டத்தை (நிறுவனப் பிரிப்பு) ("திட்டம்") பரிசீலிப்பதற்காகவும், மற்றும் பொருத்தமானதாகக் கருதப்பட்டால், திருத்தங்களுடன் அல்லது திருத்தங்கள் இன்றி அதற்கு ஒப்புதல் அளிப்பதற்காகவும், நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டத்தை ("கூட்டம்") கூட்டி நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளது என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

தீர்ப்பாயத்தின் உத்தரவைப் பின்பற்றியும் அதில் வழிகாட்டியபடியும், மற்றும் சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்கவும், நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது:

| வ. எண். | கூட்டம் | கூட்டம் நடைபெறும் கிழமை மற்றும் நாள் | கூட்டம் நடை பெறும் நேரம் (IST) | முறை |
|---|---|---|---|---|
| 1. | ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் | சனிக்கிழமை, அக்டோபர் 10, 2026 | காலை 11:00 மணி | காணொளி வாயிலாக ('VC') / பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ('OAVM') வாயிலாக |

நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவர் இக்கூட்டத்தில் காணொளி காட்சி (VC) / பிற ஒலி–ஒளி ஊடகங்கள் (OAVM) மூலமாக மட்டுமே கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இந்தக் கூட்டத்திற்கு பதிலாள்களை (proxies) நியமிப்பதற்கான வசதி கிடைக்கப்பெறாது. நிறுவனங்கள் சட்டம், 2013–ன் விதிகளுக்கு இணங்க, கூட்டத்தில் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களால் தேவையான பெரும்பான்மையினருடன் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் பட்சத்தில், அது தீர்ப்பாயத்தின் அடுத்தகட்ட ஒப்புதலுக்கும், மற்றும் தேவைப்படக்கூடிய ஒழுங்குமுறை அல்லது பிற அதிகார அமைப்புகளின் ஒப்புதல்கள், அனுமதிகள் மற்றும் அங்கீகாரங்களுக்கும் உட்பட்டதாக இருக்கும்.

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 102 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 230 மற்றும் 232–ன் கீழான அறிக்கை, நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள், 2016–ன் விதி 6, திட்டம் மற்றும் பிறவற்றை உள்ளடக்கியுள்ள கூட்டத்திற்கான அறிவிப்பானது, 31 மார்ச் 2026 நிலவரப்படி பெயர் இடம்பெற்றுள்ள ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கூறிய அறிவிப்பு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பின்வருவனவற்றிலும் வைக்கப்பட்டுள்ளன:
(i) நிறுவனத்தின் இணையதளமான www.kpmanish.com –இல் அணுகலாம்;
(ii) ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டத்திற்கான தொலைதூர மின்னணு வாக்களிப்பு (remote e–voting) வசதி, கூட்டத்தில் VC/OAVM வாயிலாகப் பங்கேற்பதற்கான வசதி மற்றும் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதி ஆகியவற்றை வழங்குவதற்காக நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட முகமையான சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL")–ன் இணையதளமான www.evotingindia.com –இலும் அணுகலாம்.

ஈடுபெறாத கடன் வழங்கியவர் விரும்பினால், தொடர்புடைய அறிவிப்புகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அச்சு நகலை (physical copy) இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான எழுத்துப்பூர்வ கோரிக்கையை, நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரியான accounts@kpmanish.com –க்கு அனுப்பலாம்.

**மின்னணு வாக்களிப்பு (e–voting) மூலம் வாக்களிக்கும் முறை மற்றும் VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்துகொள்ளும் முறை**

ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் மின்னணு வழியில், அதாவது தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு (இரண்டும் கூட்டாக "மின்னணு வாக்களிப்பு" என குறிப்பிடப்படும்) மூலம் தங்களது வாக்குரிமையைச் செலுத்துவதற்கான வசதியை நிறுவனம் வழங்குகிறது. மின்னணு வாக்களிப்பு மற்றும் காணொளி காட்சி (VC) / பிற ஒலி–ஒளி ஊடகங்கள் (OAVM) வாயிலாகக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் செயல்முறை மற்றும் வழிமுறைகள், கூட்டத்திற்கான அறிவிப்பின் "குறிப்புகள்" (Notes) பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்கான காலக்கெடு மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும், மின்னணு வாக்களிப்பதற்கும் தேவையான உள்நுழைவு (login) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| விவரங்கள் | ஈடுபெறாத கடன் வழங்கியவர்களுக்கான கூட்டம் |
|---|---|
| மின்னணு வாக்களிப்பு (e–voting) மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான தகுதியை நிர்ணயிப்பதற்கான இறுதித் தேதி | செவ்வாய்க்கிழமை, மார்ச் 31, 2026 |
| தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடக்கம் | செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 6, 2026, காலை 9:00 மணி (IST) |
| தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவு | வெள்ளிக்கிழமை, அக்டோபர் 9, 2026, மாலை 5:00 மணி (IST) |
| பயனர் ஐடி (User ID) மற்றும் கடவுச்சொல் (Password) | கூட்டத்திற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பார்க்கவும். |

குறிப்பு: தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியானது மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு முடக்கப்படும்.

"கூட்டத்திற்கு முன்பான தொலைதூர மின்னணு வாக்களிப்பு" மூலம் தங்களது வாக்குகளைப் பதிவு செய்த ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் காணொளி காட்சி ("VC") அல்லது பிற ஒலி–ஒளி ஊடகங்கள் ("OAVM") மூலமாகக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம்; இருப்பினும், கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அவர்களுக்கு உரிமை இருக்காது. மேலும், கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தங்களது வாக்குகளைச் செலுத்தாத தகுதியுள்ள ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள் VC/OAVM மூலமாகக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம், அத்துடன் கூட்டத்தின் போது மின்னணு வாக்களிப்பு மூலம் தங்கள் வாக்குகளைச் செலுத்த அவர்களுக்கு உரிமை உண்டு.

மார்ச் 31, 2026 ("கட்–ஆஃப் தேதி" – கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் இறுதித் தேதி) நிலவரப்படி நிறுவனத்திடம் உள்ள ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள ஒரு நபர் மட்டுமே, அறிவிப்பில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் மீது தனது வாக்குரிமையைப் பயன்படுத்தவும், நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டத்தில் கலந்துகொள்ளவும் உரிமை பெற்றவராவார். நிறுவனத்தின் பதிவுகளில் மின்னஞ்சல் முகவரிகள் இல்லாத ஈடுபெறாத கடன் வழங்கியவர்கள், கூட்டத்தின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மின்னணு வாக்களிப்பு வழியாகத் தங்கள் வாக்குரிமைகளைப் பயன்படுத்தலாம் மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

தீர்ப்பாயமானது, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியும் NCLT–ன் முன்னாள் உறுப்பினருமான திரு. எல். என். குப்தா அவர்களைக் கூட்டத்திற்கான தலைவராகவும், திரு. கிஷோர் பி. அவர்களைக் கூட்டத்திற்கான ஆய்வாளராகவும் (Scrutinizer) நியமித்துள்ளது.

மின்னணு வாக்களிப்பின் முடிவுகள், கூட்டம் முடிவடைந்த 2 (இரண்டு) நாட்களுக்குள் அறிவிக்கப்படும். மேலும் அம்முடிவுகள், ஆய்வாளரின் ஒருங்கிணைந்த அறிக்கையுடன் சேர்த்து நிறுவனத்தின் இணையதளமான accounts@kpmanish.com –இலும் (மூல உரையின்படியே கொடுக்கப்பட்டுள்ளது), மற்றும் CDSL–ன் இணையதளமான www.evotingindia.com –இலும் பதிவேற்றப்படும். நிறுவனம் இந்த முடிவுகளைத் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையிலும் காட்சிப்படுத்தும்.

மின்னணு வழியில் வாக்களிக்கும் வசதி தொடர்பான அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தால்வி, மூத்த மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL), A விங், 25–வது தளம், மாரத்தான் ஃப்யூச்சரெக்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், என். எம். ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 என்ற முகவரிக்கு தெரிவிக்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800 21 09911 என்ற கட்டணமில்லா எண்ணை அழைக்கலாம்.

**ஒப்பம்/–**
**திரு. எல். என். குப்தா,**
**நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட தலைவர்.**

**தேதி: செப்டம்பர் 8, 2026**



## பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின் 50 ஆயிரம் ரயில் பெட்டிகளை உருவாக்கி சாதனை

# 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் 50 ஆயிரம் கழிப்பறைகளைக் கூட கட்டவில்லை: பிரதமர் மோடி குற்றச்சாட்டு

வதோதரா, செப்.9–

**"மத்தியில், 2014ல் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்த பின், 50 ஆயிரம் ரயில் பெட்டிகளை உருவாக்கி உள்ளது. ஆனால், 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் 50 ஆயிரம் கழிப்பறைகளை கூட கட்டவில்லை," என, பிரதமர் மோடி குற்றஞ்சாட்டினார்.**

செயற்கை நுண்ணறிவில் இந்தியா சர்வதேச அளவில் வல்லரசாக உருவெடுக்கும். அதற்காக யுரேனியம், முக்கிய கனி மங்கள் வினியோகத்துக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருகிறது என்று பிரதமர் மோடி கூறினார்.

பிரதமர் மோடி நேற்று குஜராத் மாநிலத்துக்கு சென்றார். வதோதரா நகரில் நடந்த நிகழ்ச்சியில், ரூ.35 ஆயிரம் கோடி மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். ஏற்கனவே முடிவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இதில், 2,800 கி.மீ., நீளமுள்ள மேற்கு, கிழக்கு பிரத்யேக சரக்கு ரயில் போக்குவரத்து வழித்தட திட்டமும் அடங்கும்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற பலரும் ஜென்–சி இளைஞர்களாக இருந்தனர். அவர்களை நோக்கி பிரதமர் மோடி கையசைத்தார்.

நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:–

பிரத்யேக சரக்கு வழித்தடம் என்பது வேகமாக வளரும் இந்தியாவின் உயிர்நாடி ஆகும்.

இப்போது, கோபக்கார மாமாவுக்கு புகார் சொல்ல வாய்ப்பு கிடைத்து விடும். "சரக்கு வழித்தடம் எதற்கு? இனிமேல் சரக்கு லாரிகளும், சரக்கு லாரி டிரைவர்களும் என்ன ஆவார்கள்?" என்று கேள்வி கேட்பார்.

2014–ம் ஆண்டுக்கு பிறகு, உங்கள் ஆசியால் நாங்கள் டெல்லி சென்றவுடன், இந்த திட்டத்தை விரைவுபடுத்த தொடங்கினோம். 2 ஆயிரத்து 800 கி.மீ. தூர பிரத்யேக சரக்கு வழித்தடம் இன்று முடிவடைந்தது.

இன்று, கிழக்கு மற்றும் மேற்கு சரக்கு வழித்தடங்கள் நாட்டின் வர்த்தகத்தின் பிரதான முதுகெலும்பாக மாறிவிட்டன. இந்த 2 வழித்தடங்களில் நாள்தோறும் 430–க்கும் மேற்பட்ட சரக்கு ரெயில்கள் இயங்குகின்றன.

நாட்டின் ஒவ்வொரு மூலை, முடுக்கிலும் 'மாணவர்களின் எதிரொலி' மூலமாக உங்களை திசை திருப்ப சிலர் முயற்சிப் பார்கள். ஆனால் இன்றைய இளைஞர்களை 'பொய்களின் எதிரொலி' மூலம் திசைதிருப்ப முடியாது. அவர்கள் உண் மையின் பக்கம்தான் நிற்பார்கள்.

ஏ.ஐ.யில் இளைஞர்கள் நிபுணர்கள் ஆக வேண்டும். அந்த துறையில் ஜொலிக்க வேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின், நாட்டின் வளர்ச்சி வேகத்தை துரிதப்படுத்தினோம். 2014க்கு பின், 50 ஆயிரம் நவீன ரயில் பெட்டிகளை என் தலைமையிலான அரசு தயாரித்துள்ளது. ஆனால், 10 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் 50 ஆயிரம் கழிப்பறைகளை கூட கட்டவில்லை. மக்களுக்கு பணி செய்யாமல் ஒரு குடும்பத்துக்காகவே காங்கிரஸ் தலைவர்கள் உழைத்து கொண்டிருந்தனர் என்பதை நாடறியும்.

இன்று, 2,800 கி.மீ., நீளமுள்ள சரக்கு போக்குவரத்துக்கான பிரத்யேக ரயில் வழித்தடம் நிறைவடைந்து உள்ளது. இந்த வழித்தடங்கள் வேகமாக வளர்ந்து வரும் இந்தியாவின் உயிர்நாடியாக உள்ளன.

முன்பெல்லாம் ஒரு சரக்கு ரெயில் 100 கி.மீ. பயணம் செய்ய 6 மணி 30 நிமிடம் தேவைப்பட்டது. ஆனால், இப்போது அதில் பாதிக்கும் குறைவாகவே தேவைப்படுகிறது. சரக்கு ரெயிலுக்கு 30 மணி நேரம் தேவைப்படும் பயணம், பிரத்யேக சரக்கு வழித்தடத்தில் 10 முதல் 12 மணி நேரம்தான் தேவைப்படும்.

முந்தைய ஆட்சிக்காலத்தில், பட்ஜெட்டில் ஒன்று அல்லது இரண்டு ரெயில்கள் அறிவிக்கப்படும். அவை நடைமுறைக்கு வர நீண்ட காலம் ஆகும். ஆனால் இப்போது புதிய ரெயில்கள் ஒன்றன்பின் ஒன்றாக தொடங்கி வைக்கப்படுகின்றன. இந்த ஆண்டின் ரெயில்வே பட்ஜெட் ரூ.2 லட்சத்து 75 ஆயிரம் கோடி ஆகும்.

நாட்டின் உற்பத்தித் திறனின் முக்கிய அடையாளமாக வதோதரா உருவெடுத்து வருகிறது. நாட்டின் முதல், 'மேக் இன் இந்தியா' விமானத்தை தயாரித்து தேசிய அளவில் வதோதரா நற்பெயரை பெற்றுள்ளது.

பிரதமரின் சூரிய ஒளி திட்டத்தில். இதுவரை 55 லட்சம் குடும்பங்கள் தங்கள் வீட்டு மாடியில் சூரியசக்தி தகடுகளை நிறுவி உள்ளன.

செயற்கை நுண்ணறிவில் சர்வதேச அளவில் வல்லரசாக உருவெடுக்க இந்தியா தயாராகி வருகிறது. அதற்காக யுரேனியம் மற்றும் முக்கிய கனிமங்கள் வினியோகம் தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

# "மானியக் கோரிக்கை பதிலுரையின்போது எனது உடல்மொழி எதேச்சையானது": முதலமைச்சர் விஜய் விளக்கம்

சென்னை, செப்.9–

சட்டசபையில் என்னுடைய பதிலுரை இடையே எனது உடல்மொழி எதேச்சை யானது, உள்நோக்கம் கொண்டதில்லை என்று முதலமைச்சர் விஜய் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் போலீஸ், தீயணைப்புத் துறைகள் மீதான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்கு முதலமைச்சர் விஜய் நேற்று முன்தினம் பதிலளித்து பேசினார். அப்போது அவர் பேசுகையில், 'எது பேசினாலும் நாங்கள் 'மிசா'வை பார்த்தவர்கள் என்று சொல்கிறார்கள். எல்லோருக்கும் 'மிசா' வரலாறு நன்றாக தெரியும்' என்று செய்கை ஒன்றை காண்பித்தார்.

அவருடைய இந்த செய்கை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை கேலி செய்வது போன்று அமைந்ததால் தி.மு.க.வின் முன்னணி நிர்வாகிகள் சமூக வலைத்தளங்களின் கண்டன பதிவு வெளியிட்டனர்.

ஸ்டாலினின் 'மிசா' தியாகத்தை முதலமைச்சர் விஜய் தனது செய்கை மற்றும் உடல் மொழி மூலம் கொச்சைப்படுத்திவிட்டார் என்று முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு நிருபர்களிடம் ஆவேசமாக கூறினார்.

இந்த விவகாரம் குறித்து முதலமைச்சர் விஜய் விளக்கம் அளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:–

சட்டமன்றத்தில் கடந்த 7–ந்தேதி அன்று காவல்துறை மானிய கோரிக்கையில், என்னுடைய பதிலுரையின் இடையேயான எனது உடல்மொழி எதேச்சையாக வெளிப்பட்டதுதானே தவிர, அது எந்த வகையிலும் உள்நோக்கம் கொண்டதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, தனிப்பட்ட முறையில் யார் மனதையும் புண்படுத்துகிற செயலாக அதை அர்த்தம் கொள்ள வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதி

## அமைச்சர்கள் நிர்மல்குமார், அருண்ராஜ் நலம் விசாரித்தனர்

சென்னை, செப். 9–

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா, உடல் நல பரிசோதனைகளுக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

இது தொடர்பாக அக்கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜாவுக்கு உடல் சோர்வு ஏற்பட்டுள்ளது. அவர் முழு உடல் பரிசோதனைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் உடல் நலத்துடன் உள்ளார்.

கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், டி.ராஜாவின் மகளும் தேசியக் குழு உறுப்பினருமான அபராஜிதா, மாநிலக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, உள்ளிட்டோர் உடன் இருந்து உதவி வருகின்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், தமிழ்நாடு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் ஆகியோர் மருத்துவமனைக்கு வருகை தந்து டி.ராஜாவிடம் உடல் நலம் விசாரித்து சென்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**படிவம் எண். CAA. 2**

[நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 230(3) மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள், 2016–ன் விதி 6 மற்றும் 7–ன் படி]

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் முன்பாக,**
**பிரிவு அமர்வு II, சென்னை**
**நிறுவன விண்ணப்ப எண். CA(CAA) / 28 (CHE) / 2026**
**நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 232 உடன் பிரிவு 230–ன் விஷயத்தில்**
**மற்றும்**
**கே.பி. மணீஷ் குளோபல் இன்கிரிடியன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரிந்த நிறுவனம்)**
**மற்றும்**
**காவ்மன் பார்மா பிரைவேட் லிமிடெட் (உருவான நிறுவனம்)**
**மற்றும்**
**அதன் உறுப்பினர்கள் மற்றும் கடன் வழங்கியவர்கள் இடையே**
**சீரமைப்பு திட்டம் (பிரித்தல்) தொடர்பான விஷயத்தில்**

| | |
|---|---|
| கே.பி. மணீஷ் குளோபல் இன்கிரிடியன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், நிறுவனங்கள் சட்டம், 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்டது, நிறுவன அடையாள எண்: U24297TN2007PTC065205<br>பதிவு அலுவலகம்: எண். 41, ரகுநாயக்குலு தெரு, பூங்கா நகர், சென்னை 600001 | ...முதல் விண்ணப்பதாரர் நிறுவனம் / பிரிந்த நிறுவனம் |

**நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவரின் (UNSECURED CREDITORS) கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் அறிவிப்பின் விளம்பரம்**

13 ஜூலை 2026 மற்றும் 25 ஆகஸ்ட் 2026 தேதியிட்ட உத்தரவுகளின்படி ("தீர்ப்பாய உத்தரவு"), தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் ("தீர்ப்பாயம்") சென்னை அமர்வு II, நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளுடன் சேர்த்து பிரிவு 230 முதல் 232 வரையிலான விதிகளின் கீழ், கே.பி. மணீஷ் குளோபல் இன்கிரிடியன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (பிரிந்த நிறுவனம்) மற்றும் காவ்மன் பார்மா பிரைவேட் லிமிடெட் (உருவான நிறுவனம்) மற்றும் அவற்றின் தொடர்புடைய உறுப்பினர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுக்கு இடையிலான முன்மொழியப்பட்ட சீரமைப்பு திட்டத்தை (நிறுவனப் பிரிப்பு) ("திட்டம்") பரிசீலிப்பதற்காகவும், மற்றும் பொருத்தமானதாகக் கருதப்பட்டால், திருத்தங்களுடன் அல்லது திருத்தங்கள் இன்றி அதற்கு ஒப்புதல் அளிப்பதற்காகவும், நிறுவனத்தின் ஈடுபெறாத கடன் வழங்கியவர்களின் கூட்டத்தை ("கூட்டம்") கூட்டி நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளது என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

